Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 181/2024 PW-8**

Name : ராஜேந்திரன்
Father / Husband name : அந்தோணிசாமி
Village : செஞ்சி
Age : 53
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 17.04.2026

Accused present. Defence counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Palanivel.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது செஞ்சி மதுஅமலாக்கப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 14.11.2023 ந்தேதி 21.30 மணிக்கு நான் ரோசணை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கரன் என்பவர் கொடுத்த புகார் மனுவைபெற்று நிலைய குற்ற எண் 589/2023, U/s 294(b),323,353,506(i) IPC ன் படி வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மறுநாள் 15.11.2023 அன்று காலை 9 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ராமதாஸ் மற்றும் ராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்தேன். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான பாஸ்கரன், ஏழுமலை, ராஜேந்திரன், விஜயக்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்தும்

எனது இரகசிய விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவர எதிரியை தேட எதிரி 15.11.2023 காலை 11.30 மணிக்கு கொள்ளார் கிராமம் ஐசிஐசிஐ வங்கியின் அருகே நின்றிருந்த எதிரியை காரணம் கைது செய்தேன். பின்னர் அன்றையதினமே அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் எனக்கு பணிமாறுதல் காரணாமாக வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் சசிக்குமார் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.1 பாஸ்கரன் சிறப்பு உதவி ஆய்வாளர் என்னுடன் பணிபுரிபவர் என்றால் சரிதான். அ.சா.1 அன்றையதினம் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டார் என்று எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் காலை 11.30 மணிக்கு கிளம்பியதாக தெரியவந்தது. அ.சா.1 எந்த வாகனத்தில் சென்றார் என்றால் அவரின் இருச்சக்கர வாகனத்தில் சென்றார். அதன் பதிவு எண் குறித்து புகாரில் சொல்லியுள்ளாரா என்றறல் இல்லை. புகாரில் சம்பவத்தை நேரில் பார்த்தவர்களை பற்றி சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 அன்றையதினம் பணியிலிருந்ததற்கான பணிப்பதிவேடு கொடுத்தாரா என்றால் இல்லை, பணிக்குறித்து பொதுநாட்குறிப்பு பாராமரிப்போம். அ.சா.1 தனியாக சென்றாரா அல்லது உடன் யாராவது சென்றார்களா என்றால் இல்லை, தனியாக சென்றார். புகாரில் குறிப்பிட்டுள்ள நேரம் 15.30 திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், 03.30 என எழுதி 15.30 என திருத்தம் செய்துள்ளார். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவயிடம் செல்லவில்லை, எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. முதல் தகவல் அறிக்கையில் 14 வது காலத்தில் புகார்தாரரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 என்னுடன் பணிபுரிபவர் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரிக்காமல் வழக்கு

பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் பெயரை எப்படி தெரிந்துகொண்டேன் என்று அ.சா.1 புகாரில் சொல்லியுள்ளரா என்றால் இல்லை, அ.சா.1 அங்குள்ளவர்களை விசாரித்து தெரிந்துகொண்டதாக சொன்னார். யாரை விசாரித்தேன் என்று பெயரை குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 ன் வீட்டிற்கு எதிரி வேலைக்கு செல்வார், சரிவர சம்பளம் தராததால் எதிரி கேட்டதால் அவரின் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.